# 1 விநாயகர்



**"பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்**
**சரவணவற் புதமலர் தலைக்கணி வோமே"**

என விநாயகப் பெருமான் அதிவீரராம பாண்டியன் இயற்றிய 'வெற்றி வேற்கை' என்ற நூலில் போற்றப்படுகின்றார்.

ஓம் என்னும் பிரணவ மந்திரத்தின் பொருளாய் விளங்கும் கருணை என்னும் பெருந்தகைமையுடைய ஐந்து கைகளுடைய விநாயகப் பெருமானது திருப்பாதங்கள் என்னும் அற்புதமான தாமரை மலர்களை எமது தலைகளிலே சூடிக்கொள்வோம் என்பது இப்பாடலின் பொருளாகும்.

விநாயகப் பெருமானை முதலில் வழிபட்டு, எந்தச் செயலையும் செய்யத் தொடங்குவது சைவ மக்களின் மரபாகும். அவ்வாறு அவரை வணங்கி, எச்செயலைத் தொடங்கினாலும் அது தடையின்றி நிறைவேறும். ஓங்கார மூர்த்தியான விநாயகரை வழிபட்டால் எமது அகங்காரம் நீங்கும். தும்பிக்கையானை நம்பிக்கையோடு வழிப்பட்டால் சகல வளங்களும் கிட்டும்.

விநாயகரை கணபதி, விக்னேஸ்வரன், கணேசன், ஆனைமுகன், பிள்ளையார், கஜமுகன் எனப் பல பெயர்கள் கொண்டு வழிபாடு செய்வர். விநாயகப் பெருமானை ஆலயங்களில் பிரதிஷ்டை செய்து வழிபடுவதுடன், வீடு, ஆற்றங்கரை, குளக்கரை, ஆலமரத்தடி, அரசமரத்தடி முதலான இடங்களிலும் அவருக்கு உருவங்கள் அமைத்து வழிபாடு செய்கின்றனர்.



விநாயகப் பெருமானை இலகுவாக வழிபட முடியும். விநாயகர் திருவுருவம் இல்லாத இடத்தில் மஞ்சள், சந்தனம், சாணம் என்பவற்றில் ஏதாவது ஒன்றினால் பிள்ளையார் பிடித்து அதில் அறுகம்புல்லை குத்தி வழிபடுவது சைவர்களின் மரபாகும்.

முன்னொரு காலத்தில் அகத்தியர் தம்முடைய கமண்டலத்தில் கங்கை ஆற்றுநீரை அடைத்து பக்கத்தில் வைத்துக் கொண்டு சிவபூசை செய்து கொண்டிருந்தார். அவ்வேளை இந்திரன் பிள்ளையாரை வழிபட்டு அகத்தியரின் கமண்டலத்தின் நீரை வெளியேற்றும்படி வேண்டியதற்கு அமைவாக பிள்ளையார் காக்கை வடிவில் சென்று, அகத்தியரின் கமண்டலத்தில் அமர்ந்தார். அகத்தியர் காகத்தை எகையசைத்து விரட்டினார். காக்கை கமண்டலத்தை காலால் உந்திவிட்டுப் பறந்தது. கமண்டலம் கவிழ்ந்து, கமண்டல நீர் காவிரியாகப் பெருக்கெடுத்தது.



அகத்தியருக்கு அருள்பாளித்தல்

அகத்தியர் கோபத்துடன் காகத்தைத் துரத்த காகமாக இருந்த பிள்ளையார் சிறுவனாக உறுமாறி நின்றார். சிறுவனை இரண்டு கைகளாலும் தலையில் குட்ட நினைந்து, சிறுவனை விரட்டிக் கொண்டு ஓடினார்.அப்போது பிள்ளையார்

தமது உண்மை வடிவைக் காட்ட அகத்தியர் திகைத்தார். பின்னர் அவர் பிள்ளையாரை வணங்கி "ஓங்காரப் பொருளே, உன்னைச் சிறியவன் எனக்கருதி குட்ட வந்த நானே சிறுவன்'என்று சொல்லித் தலையில் குட்டிக் கொண்டார். அப்போது பிள்ளையார் "அன்பனே இன்று முதல் எம் திருமுன் பக்தியுடன் நின்று தம் தலையில் குட்டிக் கொள்வோர் கூரிய அறிவும் சீரிய செல்வமும் பெற்று வாழ்வர்'' என்று அருள் புரிந்தார். அன்று முதல் நெற்றியில் மூன்று முறை குட்டி வழிபடுவது வழக்கமாயிற்று.



கஜமுகாசுரனை வதம் செய்தல்

தோப்புக்கரணம் போடுதலும் பிள்ளையாருக்கே உரிய சிறப்பான வழிபாட்டு முறையாகும். வலக்காதை இடக் கையினாலும், இடக்காதை வலக்கையினாலும் பிடித்துக் கொண்டு, மூன்று முறை தாழ்ந்தெழுந்து வழிபடுதல் தோப்புக்கரணம் போடுதலாகும். அதனுடன் தொடர்புடைய புராணக்கதை ஒன்றும் உண்டு. அதனை நாம் அறிந்து கொள்வோம்.

முன்னொரு காலத்தில் கஜமுகன் என்னும் அசுரன் தேவர்களைத் தன் அடிமைகளாக்கினான். அவர்களைத் தன் முன் ஆயிரம் முறை தோப்புக்கரணம் போடச்செய்தான். தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட, அவர் கஜமுகாசுரனின் செருக்கை அடக்க விநாயகரை அனுப்பினார். விநாயகர் கஜமுகாசுரனுடன் போர் புரிந்து அவனது உடலைப் பிளந்தார். அவன் பெருச்சாளி உரு எடுத்து விநாயகரை எதிர்த்தான். விநாயகர் அவனுக்கு ஞான உபதேசம் செய்தார். அதனால் செருக்கடங்கிய அவன், விநாயகரைத் தொழுதான். அவர் பெருச்சாளியைத் தனது வாகனமாக்கிக் கொண்டார்.

தேவர்கள், கஜமுகாசுரனுக்குத் தோப்புக்கரணம் போட்ட நிலை மாறி, அவர்கள் விநாகயருக்கு முன் அவ்வாறு செய்யத் தொடங்கினர். விநாயகர் மகிழ்ந்து "இனி என் முன் மூன்று முறை தோப்புக்கரணம்

போட்டால் போதும், அவ்வாறு செய்யும் பக்தர்கள் எனது அருளுக்குப் பாத்திரமாவார்கள்'' என்று அருளினார். அதனால் விநாயகருக்கு முன் தோப்புக்கரணம் போட்டு வணங்கும் மரபு ஏற்பட்டது.

விநாயகரைப் பல்வகைப் பூக்களாலும், இலைகளாலும் அர்ச்சிக்கலாம். ஆனால் விநாயகருக்கு மிகவும் விருப்பமானது அருகம் புல்லே. எனவே விநாயகரை வணங்கும் போது அறுகம் புல்லால் அர்ச்சித்து, வழிபடும் போது எமக்கு வருகின்ற துன்பங்கள் யாவும் எளிதாக நீங்கிவிடும். சகல சௌபாக்கியங்களும் கிட்டும். எனவே நாமும் வேழமுகத்து விநாயகரைத் தொழுது அவரின் நல்லருளைப் பெறுவோம்.



திருச்சிற்றம்பலம்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து.

திருச்சிற்றம்பலம்

## பயிற்சிகள்

பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. வெற்றி வேற்கை என்னும் நூலை இயற்றியவர் யார்?
2. ஓம் எனும் பிரணவ மந்திரப் பொருளாய் விளங்குபவர் யார்?
3. பிள்ளையார் வழிபாடு இடம்பெறும் இடங்கள் மூன்றினைக் குறிப்பிடுக.
5. விநாயகரை வழிபடுவதனால் கிடைக்கும் பயன்கள் சில கூறுக.

## செயற்பாடு

★ மஞ்சள், சந்தனம், சாணம் என்பவற்றால் விநாயகர் திருவுருவைப் பிடித்து, விநாயகருக்குரிய வழிபாட்டு முறைகளை மேற்கொள்க.

## பாடச்சுருக்கம்

✶ ஓம் என்னும் பிரணவ மந்திரத்தின் பொருளாய் விளங்குபவர் விநாயகர்.

✶ விநாயகர் என்ற சொல்லுக்கு தனக்கு மேல் தலைவர் இல்லாதவர் என்பது பொருளாகும்.

✶ விநாயகரை ஆலயம், வீடு, ஆற்றங்கரை, குளக்கரை, மரத்தடி, முதலான இடங்களில் வழிபடலாம்.

✶ விநாயகருக்கு முன் சிதறு தேங்காய் உடைத்தல், நெற்றியில் குட்டிக் கும்பிடுதல், தோப்புக்கரணம் போடுதல் முதலான வழிபாடுகள் செய்யலாம்.